1978 ஏப்ரல் 5]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ; தலைவர் அவர்களே, அந்த மின்சாரக் கட்டணத்தை தி. மு. க. அரசு உயர்த்தியிருக்கிறது. ஆனால் நேற்று பத்திரிகையில் நான் வெங்கடசாமி நாயுடுவை ஆதரித்தேன் என்று வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வெங்கடசாமி நாயுடுவை திட்டவட்டமாக மீண்டும் எந்த ரூபத்திலேயும் நிர்வாகத்தில் கொண்டு வர மாட்டோம் என்ற உறுதியை அமைச்சர் தருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வெங்கடசாமி நாயுடு மீது மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. அவரை நிர்வாக இயக்குநர் பொறுப்பிலே இருந்து மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தோடு சேர்ந்து அவர்களும் ஷேர் போட்டிருக்கிற காரணத்தாலே நாமும் சேர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு என்ன அச்சம் என்றால் மீண்டும் எப்படியாவது அவர் வந்துவிடுவாரோ என்று. தனிப்பட்டவர்களுடைய பிரச்சினை பற்றி நான் ஒன்றும் பதில் சொல்வதற்கில்லை.

சேர்வலாறு திட்டம்

* 802 வினா. திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள சேர்வலாறு திட்ட வேலையில் தேக்கம் ஏற்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.20)

திரு. ரா. கிருஷ்ணன் ; தலைவரவர்களே, இந்த சேர்வலாறு திட்டம் ஏற்கனவே பாபநாசம்—சேர்வலாறு இணைக்கும் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே நிதி ஒதுக்கம் இல்லாமல் இருப்பதால் அங்கே வேலை முடக்கப்பட்டு, பணி செய்யும் ஊழியர்கள் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்படும்

சூழ்நிலை இருக்கிறது. ஏற்கனவே இந்தக் கேள்வியை இங்கே எழுப்பியபோது அதிக நிதி ஒதுக்குவதாகவும் இங்கே பேசப் பட்டு இருப்பதாக எனக்கு ஞாபகம். ஆகவே, அத்திட்டத்தை விரைவு படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு அதற்காக நிதி ஒதுக்கம் அதிகம் செய்யப்பட்டு இருக்கிறது. ரூ. 220 லட்சம் 1978-79-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கம் செய்து இருக்கிறோம். ஆகவே, வேலைகள் விரைவில் நடைபெறும் என்று நினைக்கிறேன்.

கோமுகி அணை வாய்க்கால்கள்

*803 வினு திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

கோமுகி அணையின் கால்வாய்கள் பெருமழையினால் சீரழிந்து உள்ளதை உடனே செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோமுகி அணையின் கால்வாய்களில் கடந்த பெரு மழையினால் ஏற்பட்ட உடைப்புகள் யாவும் பொதுப் பணித்துறையினரால் சீர் செய்யப்பட்டு, கால்வாய்கள் திருத்தியமைக்கப்படுகின்றன.

திரு, சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர் களே, சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக அந்தக் கால் வாயில் பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது. அந்தக் கால்வாய் இன்னும் சில இடங்களில் சீரமைக்கப்படாமல் இருக்கிறது. மேலும், ஒவ் வொரு ஊருக்கும் உள்ள ஏரிகளுக்கு இதனால் தண்ணீர் செல்வதால், அந்த ஏரிகளுக்கு கண்மாய்கள், ஷட்டர்கள் அமைக்க அரசு முன் வருமா ? உளுந்தூர்பேட்டை வரை கட்டுவதற்கு திட்டமிடப் பட்டு தான் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. ஆகவே. உளுந்தூர்பேட்டை வரை அந்த கால்வாய் கட்டித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நீண்ட பெரிய கேள்வி இது. அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.